அழைத்து நேரில் பேசியபோது 140 இடங்கள் இருக்கின்றன என அறிந்தேன் அதிலாவது அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. 4-2-1981-ம் தேதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

182. சென்னை-600004 உள்ள இராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லத்துடன் இணைக்கப்பெற்றுள்ள கல்வி நிறுவனங்களுக்கு விற்பனை செய்யக்கூடிய குறிப்பிட்ட சில இனங்களுக் (இயந்திரங்கள்) காக செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் அறக்கட்டளைகள் துறையின் 25.10.1980 ஆம் தேதியிடப்பெற்ற 1113 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

183. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 3. 11.1980 ஆம் தேதியிடப்பெற்ற 2909 ஆம் எண் அறிவிப்பில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)).

184. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான 12—ஆவது அறிக்கையும் (தமிழ். ஆங்கிலம்) அதன்மீதான அரசின் மறு ஆய்வும் (தமிழ்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)).

185. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978—79ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கையும் 31.3.1979 ஆம் தேதிவரையிலான ஐந்தொகைக் குறிப்பும் (ஆங்கிலம்) (1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

20 தமிழ்நாடு மின்சார வாரியத்தின 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை குறித்தும், 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை குறித்தும், விவாதத்தை தொடங்கி வைத்து மின்சாரத்துறை அமைச்சர். மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை. (தமிழ், ஆங்கிலம்)

* 21. தமிழநாடு மின்சார வாரியத்தின் 1978–79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

* 22. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம். ரத்து) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/1981).

* 23, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1981).

* 24. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 3/1981)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS